21.08.2018

அனுப்புநர்

**M.முகமது ஷாஹித்,**
நெ.28எ, 6-வது குறுக்கு தெரு,
அனுகிரஹா சட்டிலைட் டவுன் ஷிப்,
பெரியகாட்டுபாளையம்,
மதலப்பட்டு அஞ்சல், கடலூர் மாவட்டம்.

பெறுநர்

038528

27 AUG 2018

**உயர்திரு.மாவட்ட பதிவாளர் /சங்க பதிவாளர் அவர்கள்,**
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
திருப்பாதிரிப்புலியூர்,
கடலூர் & மாவட்டம்.

அய்யா,

பொருள்: கடலூர் - மதலப்பட்டு – பெரியகாட்டுபாளையம் அனுகிரஹா சேட்டிலைட் டவுன் ஷிப் (71/2014)-2017-ல் புதிய செயற்குழு உறுப்பினர்கள் என்பவர்கள் சட்டத்திற்கு புறம்பாகவும் நீதிகளுக்கு முறனாகவும் செயல்பட்டு 2016 – 2017 புதுப்பித்தலில் ஏற்பட்ட முறைக்கேடு மற்றும் ஒழுங்கினங்கள் புதியப்பித்தல் பதிவை ரத்து செய்ய கோருவது – தொடர்பாக.

******

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனுகிரஹா சேட்டிலைட் குடியிருப்போர் நலசங்கம் 2014 வருடம் 20.04.2014-ல் தோற்றிவிக்கப்பட்டு எண்.5எ, 8-வது குறுக்கு தெரு, அனுகிரஹா சேட்டிலைட், பெரியகாட்டுபாளையம், முதல் துவங்கப்பட்டது. துவங்கப்பட்ட நாளிலிருந்து அச்சங்கத்தின் நோக்கங்களையும் அதில் உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களையும், ஆகியவர்களின் உறுப்பினர்கள் அவர்களுக்கான தகுதி, அவ்வாறு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள், சங்க நிர்வாக மன்றம் மற்றும் பொதுக்குழு ஆகியவற்றின் பொறுப்புகள் உரிமைகள் மற்றும் செயல்பாடுகளும் குறித்து ஒரு விரிவான உபவிதிகள் அடங்கிய Memorandum of Association கடலூர் சங்க பதிவாளர் அலுவலகத்தில் பதிவு எண்.71/2014 ஆக சான்றிடப்பட்டது. அந்த உப விதிகள் அடங்கிய Memorandum of Association-ஐ 0.04.2014 அப்போதைய தலைவர் R.செல்வராஜ் அவர்கள் கையொப்பமிட்டு, மாவட்ட சங்களின் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார். இந்நிலையில் மேற்படி R.செல்வராஜ் என்பவர் 07.09.2014 அன்று தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்தார்

மேற்படி பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். நிர்வாக மன்ற உறுப்பினராக இருந்த S.சரவணன் 07.09.2014 அன்று விலக்கலிக்கப்பட்டு அதே தேதியில் புதிய தலைவராக நியமனம் செய்யப்பட்டார். அதே தேதியில் V.ரமேஷ் புதிய நிர்வாக மன்றத்தின் உறுப்பினராக நியம்னம் செய்யப்பட்டுள்ளார். இந்த திருத்தம் 08.10.2014-ல் சமூகம் சங்க பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் M.ரமணி, E.ஹரிஷ்குமார், V.ரமேஷ் ஆகிய மூவரையும் 19.04.2015 தேதி அன்று பொதுக்குழுவின் மூலம் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவுடன் ஏற்கனவே செயலாளராக இருந்த அஷ்லேகட்டர் என்பவர் துணை செயலாளராகவும் வள்ளியம்மை என்பவரை, பொருளாளர் ஆகவும் மற்றும் பாலகிருஷ்ணன் இளங்கோ, டாக்டர் டொபிலினா சாகராய், லட்சுமி நாராயணன் மற்றும் G.கஜபதி ஆகியவர்கள் பொதுக்குழுவினர் மூலம் செயற்குழுவில் இருந்து விளக்களிக்கப்பட்டார்கள். அவ்வாறு விளக்களிக்கப்பட்ட செயலாளர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் 5 செயற்குழு உறுப்பினர்களுக்கு பதிலாக G.கஜபதி, A.சத்தியா, M.ரமணி ஆகியவர்கள் ஆகியோர்கள் செயலாளர், துணை செயலர், பொருளாளராகவும் மற்றும் K.சுப்பரமணியம், E.ஹரிஷ், கந்தமணி, ரமேஷ், புனிதா ஆகியர்கள் செயற்குழு ஊறுப்பினராகவும் 19.04.2015ல் நியமிக்கப்பட்டு அதனை சமூகம் சங்கபதிவாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் பட்டியலில் தமிழ்நாடு சங்க பதிவு சட்டம் 1975 பிரிவு 14(1) மற்றும் தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகள் 1978 விதி 16-ன் கீழ் மேற்படி சங்கத்தின் அங்கத்தினர்களை பதிவு புத்தகத்தின்படி அங்கத்தினர்கள் 1 முதல் 28 வரை பட்டியலை (மேற்படி தலைவர், செயலர், துணை தலைவர், பொருளாளர் மற்றும் நிர்வாக மன்ற உறுப்பினர்கள் உள்அடக்கியது) பட்டியலை மேற்படி சங்கத்தில் 19.04.2015-க்கு பிறகு தேர்தல் எதுவும் நடக்காததால் 19.04.2014 தேதியின் நிலவரப்படி சங்கதலைவர் S.சரவணன் செயலாளர் G.கஜபதி துணை செயலாளர் V.சத்தியா பொருளாளர் M.ரமணியின் செய்குழு உறுப்பினர்கள் பெயர்கள் ஆகியவர்களையும் கொண்ட நிர்வாகமன்றம் 2017 செப்டம்பர் வரை மேற்படி சங்கத்தை நடத்தி வந்தார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி இந்நிலையில் 30.09.2017 அன்று நடந்ததாக செல்லப்பட்டு இடம் குறிப்பிடப்படாமல்

சொல்லப்பட்டு பொதுகுழுவில் தீர்மானம் எண்.3ன் கீழ் P.வரதன், R.ஜெகன்மோகன், அருணா முதல் S.சுஜாதா முடிய 27 நபர்களை மேற்படி சங்கத்தின் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டதாக உள்ளது, அதன் பின் அதே தேதிய தீர்மான P.வரதன் தலைவர் குணசேகர் துணைத்தலைவர், ஜெகன்மோகன் செயலாளர் பாலகிருஷ்ணன் மற்றும் அருணா இணை செயலாளர்கள் ஜெயபால் அவர்களை பொருளாளர் புதியதாக மீதமுள்ள அத்தனை பெயரும் புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் மீதமுள்ள 25 உறுப்பினர் செயற்குழு நிர்வாக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு கண்டுள்ளது அதை செயலளர் என்ற ஹோதாவில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக கூறுப்படும் R.ஜெகன்மோகன் சங்க பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்துள்ளதாக ஏற்படுகிறது. நிலைமை இவ்வாறு இருக்கையில் 1978-ஆம் வருடத்தில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவிதி 17(2)ன் கீழ் நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக்குழுவினர் அடங்கிய பட்டியலை, 30.09.2017-ல் உறுப்பினராக தகுதியில் பொது நிலையில் சேர்க்கப்பட்டதாக ஏற்படும் மேற்படி R.ஜெகன்மோகன் என்பவர் சமூகம் சங்க பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மேற்படி சங்க உபவிதி 10-ன்கீழ் மேற்படி அனுகிரஹா சேட்டிலைட் நகரம் அனைத்து வீட்டு உரிமையாளர்தான் உறுப்பினராக தகுதி வாய்ந்தவர்கள் என்றும், அவர்களில் 18 வயது நிரம்பியவர்கள் தான் நுழைவு கட்டணமும் சந்தாவும் கட்டி நிரந்திர உறுப்பினர்களாக வேண்டும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 30.09.2017 புதியதாக உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட நபர்களில் வரதன் மற்றும் R.ஜெகன்மோகன் ஆகிய இருவருக்கும் அனுகிரஹா சேட்டிலைட் நகரம் வீட்டு உரிமையாளராக இல்லை என்ற நிலையில் மேற்படி P.வரதன் மற்றும் R.ஜெகன்மோகன் அங்கத்தினர் சங்க உறுப்பினராக தகுதியே இல்லாதவர்கள் ஆவார்கள். இந்நிலையில் மேற்படி P.வரதன் மற்றும் R.ஜெகன்மோகன் ஆகியோர் தலைவர் மற்றும் செயலாளராகவும் 30.09.2017-ல் தேர்ந்தேடுக்கப்பட்டதே செல்லத்தக்கதல்ல. மேலும் 30.09.2017 தேதியில் S.சரவணன் என்பவர் தலைவராக தொடர்ந்திருந்த நிலையில் சங்கத்தின் உறுப்பினர் ஆகாத P.வரதன் என்பவர் தலைமையில் 30.09.2017

நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளதும். அவர் தலைமையில் பொதுக்குழு கூட்டம் நடந்ததாக சொல்வதும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் அந்த கூட்டம் எந்த இடத்தில் எந்த நேரத்தில் நடந்தது என கூறிப்பிடப்படவில்லை.

நிலமை இவ்வாறு இருக்க 30.09.2015-ல் 2014 – 2015-க்குகான சங்க பொதுக்குழு கூட்டம் 30.09.2015-ல் (நடந்த இடம் கூறிப்பிடபடாமல்) அன்றைய தேதியில் உறுப்பினராக அல்லா தவறும் 30.09.2017-ல் அன்றுதான் புதிய உறுப்பினராக சேர்க்கப்பட்ட வருமான (சங்க விதிகளின்படி உறுப்பினராக தகுதி இல்லாதவர்) P.வரதன் தலைமையில் பொதுகூட்டம் நடந்ததாகவும் அதில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் கண்டு அதேபோல் சங்க உபவிதி 10-ன் கீழ் சங்கத்தின் உறுப்பினராக தகுதி இல்லாதவரும் 30.09.2017 அன்று தான் புதிய உறுப்பினராக சேர்க்கப்பட்டு அன்றைய தேதியிலேயே பதவியேற்று கொண்டதாக சொல்லப்படும் 2014 – 2015ன் பொதுக்குழு கூட்டத்தில் அப்போதைய செயலாளர் என்பது போல செயலாளர் ஹோதாவில் கையெப்பட்டு (தேதி இல்லாமல்) தங்கள் அலுவலகத்தில் பொய்யானதொரு ஆவணத்தை சமர்ப்பித்துள்ளார். அதேபோல் 31.03.2017- உடன் முடியுரும் கணக்கும் ரசீது மற்றும் பட்டுவாட கணக்கு (Payment and receipt) பற்றி 30.09.2017-ல் புதிய உறுப்பினர்கள் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சொல்லப்படும் உறுப்பினராக சேர்க்கப்பட்டு, பிரச்சனைக்குரிய 30.09.2017 அன்று ஏற்று கொண்டதாக சொல்லும் நபர் 30.03.2017 கணக்கு முடிய உள்ள வருடத்திற்கு கணக்கு தாக்கல் செய்துள்ளர். அதில் தேதி குறிப்பிடமான கையொழுத்திட்டு தாக்கல் செய்துள்ளார்.

சின்டிகேட் வங்கி, ரெட்டிச்சாவடி கிளையில் அனுகிரஹா சேட்டிலைட் குடியிருப்போர் நலசங்கம் பதிவு எண்.71/2014 என்ற பெயரில் கணக்கு எண்.63242200018604-யை S.சரவணன் தலைவர், G.கஜபதி செயலாளர், M.ரமணி பெருளாளர் இவர்கள் தான் 20.05.2015 முதல் 30.09.2017 வரை வங்கி கணக்கில் பல லட்சம் ரூபாய் பராமரித்துள்ளனர். சமூகம் சங்க பதிவாளருக்கு இதையும் மறைத்து பொய்யான வரவு செலவு கணக்கை தாக்கல் செய்துள்ளார்.

மேலும் 1978-ஆம் வருடத்தில் தமிழ்நாடு சங்கத்தின் விதி 16-ன் கீழ் அங்கத்தினர் பட்டியல் குறித்து மேற்படி மேல கூறப்பட்ட

அதே ஜெகன்மோகன் என்பவர் செயலாளர் என்ற ஹோதாவில் தேதி குறிப்பிடாமல், கையொபத்திட்டும் அளித்துள்ள சங்க 28 உறுப்பினர்கள் கொண்ட பட்டியலில் P.வரதன் R.ஜெகன்மோகன், அருணா, M.சுஜாதா, ஆகியவர்களின் பெயர்கள் மேற்படி உறுப்பினர்கள் பட்டியலில் காணப்பட உள்ளது. அதன்படி பார்கையில் 2014-ல் இருந்தே 2017 செப்டம்பர் வரையில் மேற்படி 4 நபர்களும் சங்க உறுப்பினராக இல்லை என்று தெள்ளதெளிவாகும். இவற்றை எல்லாம் பரிசீலித்தபோது மேற்படி சங்கத்தில் சங்கம் ஆரம்பிக்கபபட்ட காலம் முதல் 30.09.2017 வரையில் நடந்ததாக செல்லப்படும் பொது கூட்டம் வரையில் மேற்படி வரதன் மற்றும் R.ஜெகன்மோகன் என்பவர் இருவரும் உறுப்பினர்களாக சங்க விதிகளின்படி உறுப்பினராக தகுதியில்லா நிலையல் 30.09.2017 நடந்ததாக செல்லப்படும் பொதுக்குழு கூட்டத்தில் தங்களை தலைவர் செயலாளர் என்று பொய்யான தகவலை அளித்து 2014 – 2015, 2015-2016, 2016 – 2017 ஆகிய காலங்களில் மேற்படி அக்காலத்தில் உறுப்பினரே அப்போதைய வரதன் தலைமையில் பொதுக்குழு கூட்டம் நடத்துவரும் அதே காலத்தில் செயலாளர் அல்லாத ஜெகன்மோகன் செயலாளர் ஹோதாவில் கையொப்பமிட்டு தங்கள் அலுவலத்திற்கு பொய்யான தகவல்கள் அடங்கிய உறுப்பினர் மற்றும் கணக்கு விபரம் அளித்து, சங்க விதிகளுக்கு முறனாகவும் சங்க உபவிதிகளுக்கு முறனாகவும் சட்டத்திற்கு முறனாகவும் 2015 – 2016 பின் புதிப்பிக்கப்படாமல் செயலிழுந்து போன (Defunct-ஆன) சங்கத்தை சங்கம் செயல் இழந்து விடாமல் இருந்தது போல் காண்பிக்கும் உள்நோக்கில் சமூகம் சங்க பதிவாளரை நம்பும்படி செய்து மேற்படி இரு நபர்களும் சங்கத்தை புதுப்பித்தாக காண்பித்து அனுகிரஹா சேட்டிலைட் ரகசியம் குடியிருப்போர் நலசங்கம் உரிமையாளர்களின் நலனுக்கு குந்தகம் விலைவிக்கும் வகையிலும் 1993 தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் விதிகளுக்கு புறம்பாகவும் செயல்பட்டு மேற்படி நகரில் மக்களின் அன்றாட வாழ்கையிலும் குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆதலால், மேன்மைமிகு சங்கபதிவாளர் அவர்கள், மேற்படி நபர்கள் மேற்படி நபர்கள் புதுப்பித்துள்ள சங்க பதிவை, உரிய விசாரணை செய்து, உபவிதிகளின் படி ரத்து செய்ய வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி நபர்தான் தலைவர், செயலாளர் இணை செயலாளர் என்ற ஹோதாவில் தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டபடி கிராம பஞ்சாயத்து தலைவர் மற்றும் [illegible]

வேண்டிய சட்ட ரீதியாக கடமைகளை அந்த நகரிய வீட்டு குடியிருப்போர் மீது சட்டத்திற்கு புறம்பாக சுமைகளை இறக்கி வைத்து செய்ய 1993-ம் வருடத்தில் கிராம பஞ்சாயத்து சட்டபடி நிர்வாகத்தின் கடமை தவறியவர்கள் கடலூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.289/2018ன் வழக்கு தொடர்ந்து அது நிலுவையில் உள்ளது.

மேற்படி நபர்கள் ஹோதாவில் செயல்படாமல் இருக்க உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரகள் கோரி பதியப்பட்ட வழக்கு வருகின்ற 23.08.2018 அன்று வருகிறது.

எனவே, மேற்படி தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் மற்றும் விதிகளுக்கு புறம்பான சங்க எண்.71/2014-ன் உபவிதிகளுக்கு புறம்பாகவும் பொய்யான தகவலை தங்களுக்கு அளித்து தங்களை நம்பும்படி செய்து 2016ல் Defunct-ஆன சங்கத்தின் பதிவை நிட்டித்து இருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதாலும் பொய்யான ஆவணங்களை அளித்து பதிவினை நீட்டித்து செல்லாதது என்பதை தக்கபடி அதை உரிய விசாரணை செய்து அதனை ரத்து செய்து அவர்கள் இந்த ஹோதாவில் இயக்கப்படாமல் இருக்க கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

M. Mohdabdulhid.

நகல்:

1. உயர்திரு பத்திர பதிவுத்துறை தலைவர் அவர்கள்.
   சாந்தோம், சென்னை.

2. உயர்தி பத்திரபதிவுத்துறை துணைத்தலைவர் அவர்கள்,
   மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
   திருப்பாதிரிப்புலியூர், கடலூர்.